1968 மார்ச் 14]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நடப்பு ஆண்டில் 12 மாணவர்கள் இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே இரண்டு மதுரை மாவட்டத்தில்—மாணவிகளுக்காக கன்னிசேர்வைப் பட்டியிலும், மாணவர்களுக்காக ஜக்கம்பட்டியிலும் துவக்கப்பட்டிருக் கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள், தங்களுடைய தொகுதியில் செந்துறையில் ஒரு அரசினர் மாணவர் இல்லம் துவக்கவேண்டுமென்று மனு தந்தார்கள். அதை அரசு பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. தேவைப்படுமானுல், அடுத்த ஆண்டில்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

கூலி நிர்ணயக் குழுக்கள்

*216 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொழிலாளர்களின் நலனைக் கருதி அமைக்கப்படும் சம்பளம் அல்லது கூலி நிர்ணயக் கமிட்டிகளில் முதலாளி, தொழிலாளி பிரதி நிதிகள் நியமிக்கப்படுகிறுர்களா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறுர்கள் ?

(உ) நியமனம் செய்வதற்கு முன்னுல் யார் யாரிடம் ஆலோசனை கேட்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) 1948-ம் ஆண்டு குறைந்தளவுக் கூலிச் சட்டத்தின் 5 (1) (a) பிரிவையொட்டிப் பட்டியலில் கண்ட வேலையின் குறைந்தளவுக் கூலி வீதங்களை உறுதிப்படுத்த அல்லது திருத்தியமைக்க அரசு ஒரு குழுவை அமைத்தது ; இக்குழுவில், தொழிலதிபர்களும் பட்டியலில் கண்ட வேலையில் உள்ள தொழிலாளர்களும் பங்கு பெறும் வகையில் அந்தந்த மாநில அரசு நியமிக்கக்கூடியவர்கள் உறுப்பினராக இருப்பர் ; தொழி லதிபர்களும் தொழிலாளர்களும் இதில் சம எண்ணிக்கையிலிருப்பர் ; அக்குழுவிலுள்ள மொத்த உறுப்பினர்களில் 1/3 பங்குக்கு மேற்படாத தனிப்பட்டவர்கள் அதன் உறுப்பினர்களாயிருப்பர். அத்தகைய தனிப் பட்டவர்களில் ஒருவர் 1948-ம் ஆண்டு குறைந்தளவுக் கூலிச் சட்டத்தின் 9-வது பிரிவையொட்டி இக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார்.

(உ) இக்குழுவின் தலைவர் உட்பட இதன் உறுப்பினர்கள் பொதுவாகத் தொழிலாளர் ஆணையரின் பரிவுரையின்மீது நியமிக்கப் படுகின்றனர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பல தொழிற்சங்கப் பிரிவுகள் இருக்கின்றனவே, அத்தனைத் தொழிற்சங்கப் பிரிவுகளைச் சார்ந்தவர் களையும் இதில் பிரதிநிதிகளாகச் சேர்த்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கை ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு தொழிலுக்கும், அது பற்றி ஆராயும்போது, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழி லாளர் தலைவர்கள் பலதரப்பட்டவர்களையும் சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. மாநில அளவில் உள்ள குழுக்களைப் பொறுத்தவரை யில், பல தரப்பட்டவர்களுக்கும் அதில் பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, will the Government give representation to all the Labour Unions in this Committee because there is no question of one union for one industry had as there are different kinds of unions with different party affiliations ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் முதலில் சொன்னேன். மாநில அளவில் உள்ள கமிட்டியில் தொழிற்சங்கத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய பிரதிநிதிகளில் பலதரப்பட்டவர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ். ஆகிய இவைபோன்ற சங்கங்களின் பிரதிநிதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஒரு தொழிலைப்பற்றிப் பரிசீலிக்கக் குழு அமைக்கும்போது, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர் தலைவர்கள் யார் என்று ஆராய்ந்து, அதிலே பலதரப்பட்ட கருத்து உள்ளவர்களுக்கும் இடம் தரப்படுகிறது.

DR. H. V. HANDE : Sir, In this Wage Committee, how many members are there and who are they ? Also, for how many days did the Committee meet and what are the recommendations made by this Committee. Will the Hon. Minister give us details about this matter ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பொதுவாகக் கேட்கப்படுகிற கேள்வி. ஸ்டேட் கமிட்டியைப் பொறுத்தவரையில், அவர்கள் அவ்வப்போது பீடித் தொழில், சுருட்டுத் தொழில், தையல் தொழில், இப்படிப்பட்ட தொழில்களில் உள்ளவர்களைப்பற்றிக் குறிப்பாக ஆராய்ந்து, அதிலே சம்பந்தப்பட்டவர்கள் அதிலே அடிக்கடி சந்தித்து அப்போதைக்கப்போது முடிவுகள் எடுக்கிறார்கள். ஏதாவது குறிப்பிட்டு அவர்கள் தனியாகக் கேட்டால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும். ஸ்டேட் அட்வைசரி போர்டைப் பொறுத்தவரையில், மொத்தம் 21 பேர்கள் இருக்கிறார்கள். பட்டியலைப் படிப்பதற்கு அதிக நேரம் ஆகும் என்று கருதுகிறேன். பொதுவாக ஐ.என்.டி யு.சி., ஏ.ஐ.டி.யு.சி. ஆகியவற்றில் உள்ளவர்களுக்கும், டானரி ஒர்க்கர்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஒர்க்கர்ஸ் லேபர் யூனியனுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது இப்படிப் பலதரப்பட்டவர்களுக்கும் அமைப்பிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி: தலைவர் அவர்களே, பலதரப்பட்ட தொழிலாளர்கள், பலதரப்பட்ட தொழில்களுக்கு ஒவ்வொரு பிரதிநிதித்துவம் அளிப்பதற்குப் பதிலாக, தொழிலாளர்களுக்காக இருக்கப்பட்ட சம்மேளனத்திலிருந்து ஒருவரை, ஒரு முக்கியஸ்தரைச் சேர்த்துவிட்டால் நல்லதாக இருக்கும் அல்லவா? உதாரணமாக, ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி. போன்றவற்றிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிக் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தான் சொன்னேன். குறிப்பிட்ட ஒரு தொழிலுக்கு ஒரு பிரதிநிதித்துவம் என்று கொடுக்கப்படுகிறதே தவிர, அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் அளிப்பது இல்லை.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, விவசாயக் கூலிகளுக்கு, கூலி நிர்ணயிப்பது எந்த அடிப்படையில்? ஜில்லாவுக்கு ஜில்லா இந்தக் கூலி வித்தியாசமாக இருப்பதால், அந்தந்த ஜில்லாவில் இருக்கக்கூடியவர்களை அணுகி இதை நிர்ணயிக்க உத்தேசமா? அல்லது வேறு எந்த முறையில் இந்தக் கூலி நிர்ணயிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டத்தின் கீழ் விவசாயக் கூலிகளுக்கு கூலி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வெப்பொழுது கொடுக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.